# பிப்ரவரி – 2023

## அரசியல் அறிவியல்

1. **நியூ இந்தியா அஷ்யூரன்ஸ் (NIA)** என்ற நிறுவனம் **'நீங்கள் ஓட்டும்போது பணம் செலுத்துங்கள்'** (PAYD) என்ற காப்பீட்டுத் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. இது வாகனப் பயன்பாட்டின் அடிப்படையில் தவணைக் கட்டணத்தை வசூலிக்கும் **விரிவான மோட்டார் வாகன காப்பீட்டை** வழங்குகிறது.

2. **ஐ.நா.வின் உலக மக்கள்தொகை அறிக்கைகள் 2022 இன் படி**, 2023 ஆம் ஆண்டில் உலகின் அதிக மக்கள் தொகை கொண்ட நாடான சீனாவை இந்தியா முந்திவிடும் என்று கணிக்கப்பட்டுள்ளது.

3. **அந்த்யோதயா திட்டம் என்பது கிராமப்புற மேம்பாட்டு அமைச்சகத்தின்** கீழுள்ள திட்டமாகும். இது **கிராமப்புறங்களில் வாழ்க்கை மற்றும் வாழ்வாதாரங்களை மாற்றியமைக்கும் அளவுருக்களின் முடிவுகளை அளவிடுவதற்கான** ஒரு ஒருங்கிணைப்பு கட்டமைப்பாகும்.

4. **'ஆபரேஷன் தோஸ்த்'** என்பது **சிரியா** மற்றும் **துருக்கியில்** ஏற்பட்ட நிலநடுக்கத்தின் போது அம்மக்களுக்கு உதவுவதற்காக இந்திய அரசாங்கத்தால் தொடங்கப்பட்ட ஒரு தொடர்ச்சியான தேடல் மற்றும் மீட்பு நடவடிக்கை ஆகும்.

5. **தேசிய பழங்குடியினர் ஆணையம்( NCST)** தனது முழுமையான அங்கீகரிக்கப்பட்ட உறுப்பினர்கள் அளவில் **50 சதவீதத்திற்கும் குறைவான உறுப்பினர்களைக் கொண்டு** செயல்பட்டு வருகிறது என்று பழங்குடியினர் விவகார அமைச்சகம் தெரிவித்துள்ளது.

6. தென்னிந்தியாவின் முதல் தொழில்துறை வழித்தடத் திட்டம், சென்னை – பெங்களூரு தொழில்துறை வழித்தடத் திட்டத்தின் (CBIC) கீழ் **துமகுருவில்** செயல்படுத்தப்பட உள்ளது.

7. **கிரேட்டர் திப்ராலாந்து** என்பது **திரிபுரி மக்களுக்காக** தனி மாநிலம் அமைக்க முன்மொழியப்பட்ட பகுதியாகும்.

8. மத்திய சுரங்க அமைச்சகம், **புவிசார் மரபுச் சின்னங்கள் மற்றும் புவியியல் நினைவுச் சின்னங்கள்** (பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு) மசோதா, 2022- ன் வரைவை பொதுமக்களின் கருத்துகளுக்காக அறிவித்தது.

9. மும்பையில் **அரபு அகாடமியை** பிரதமர் மோடி திறந்து வைத்தார்.

10. அகில இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகம் (AICTE) மற்றும் **காவல் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு பணியகம்** ஆகியவை இணைந்து **கவாச்-2023**ஐ அறிமுகப்படுத்தின. இது **இணைய அச்சுறுத்தல்களைச் சமாளிப்பதற்கும்** பயனுள்ள தீர்வுகளை வழங்குவதற்குமான ஒரு தேசிய அளவிலான ஹேக்கத்தான் ஆகும்.

SHANKAR IAS ACADEMY ZERO CURRENT AFFAIRS

11. இந்திய தேர்தல் ஆணையம், ஏக்நாத் ஷிண்டேவின் தலைமையிலான பிரிவுக்கு **சிவசேனா** என்ற கட்சியின் பெயரையும், கட்சியின் **வில் மற்றும் அம்பு** சின்னத்தையும் வழங்க உத்தரவிட்டது.

12. **22வது சட்ட ஆணையத்தின்** கால வரையறையை **ஆகஸ்ட் 31, 2024** வரை நீட்டித்தது. தலைவர்: **ரிது ராஜ் அவஸ்தி**

13. **நாடாளுமன்ற உறுப்பினர்களின் உள்ளூர் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் (MPLADS) திருத்தப்பட்ட விதிமுறைகள்** : MPLADS நிதியில் **திரட்டப்படும் வட்டியை** வளர்ச்சிப் பணிகளுக்குப் பயன்படுத்த **முடியாது.** மேலும் அந்த **வருவாய்கள் இந்தியாவின் ஒருங்கிணைந்த நிதியில்** வைப்புத் தொகையாக செலுத்தப்படும்.

14. **இந்திய தலைமை நீதிபதி** ( CJI) அவர்கள் உச்ச நீதிமன்றம் அதன் தீர்ப்புகளுக்கு "நடுநிலை மேற்கோள் முறையை" பின்பற்றும் என்று அறிவித்தார்.

15. **'அவள் மாற்றம் செய்பவள்' என்பது அனைத்து மட்டங்களிலும்,** அதாவது கிராம பஞ்சாயத்துகள் முதல் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அரசியல் பணியாளர்கள் வரை பெண் **பிரதிநிதிகளின் தகுதிகளை மேம்படுத்துவதற்காக தேசிய மகளிர் ஆணையத்தால்** தொடங்கப்பட்ட **திறன் மேம்பாட்டுத் திட்டமாகும்.**

## *பொருளாதாரம்*

1. **பாரம்பரியத்திற்கான ஹைட்ரஜன் :** இந்தியா தனது உலகப் புகழ் மிக்க பாரம்பரிய இரயில் **பாதைகளில் ஹைட்ரஜன் ஆற்றலைக் கொண்டு இயங்கும் இரயில்களை** அறிமுகப்படுத்த திட்டமிட்டுள்ளது.

2. **ரிசர்வ் வங்கியின்** கூற்றுப்படி, **கொடுப்பனவு உள்கட்டமைப்பு மேம்பாட்டு நிதி (PIDF)** திட்டத்தின் கீழ் சுமார் **1.87 கோடி** டிஜிட்டல் கட்டணம் ஏற்றுக்கொள்ளும் சாதனங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

3. இந்திய ரிசர்வ் வங்கி, **டிசம்பர் 01, 2022 அன்று சோதனை அடிப்படையில் முதல் டிஜிட்டல் ரூபாய்- சில்லறை விற்பனைப் பிரிவை (e₹-R)** அறிமுகப்படுத்தியது.

4. **இந்தோனேசியா-மலேசியா-தாய்லாந்து வளர்ச்சி முக்கோண** கூட்டு வணிகக் குழு (IMT-GT JBC) உடன் இந்தியா ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது.

5. டெல்லியில் உள்ள **சப்தர்ஜங் மருத்துவமனையில்** முதல் **ஒருங்கிணைந்த மருத்துவ மையம்** திறக்கப்பட்டது.

6. 2021-22 ஆம் ஆண்டில், வெளிநாடுகளிலிருந்து இந்தியாவிற்கு அனுப்பப்பட்ட பண வரவுகளின் மதிப்பானது 89,127 மில்லியன் அமெரிக்க டாலர்களாகும்.

7. TREDs வணிகங்களின் கீழ், **நிதி நிறுவனங்கள்** அல்லது **அரசு நிறுவனங்கள்** MSME களுக்கு நிதி உதவி வழங்க முடியும். இப்போது **உற்பத்தி வணிகங்களும்** இதில் சேர்க்கப்பட்டுள்ளன. (RBI)

SHANKAR IAS ACADEMY ZERO CURRENT AFFAIRS

8. **MobiKwik UPI** இல் **RuPay** கிரெடிட் கார்டுகளை ஆதரிக்கும் முதல் **fintech செயலியாகும்.**

9. இந்தூர் மாநகராட்சி (IMC) சூரிய மின்சக்தி திட்டத்திற்கு ரூ 244 கோடி வரை நிதி திரட்டுவதற்காக இந்தியாவின் முதல் நகராட்சிப் பத்திரங்களைத் தொடங்கியுள்ளது.

10. **ஐரோப்பிய ஒன்றியம்** சமீபத்தில் **பசுமை ஒப்பந்த தொழில்துறை திட்டத்தை அறிவித்தது.** இது உள்நாட்டு பசுமை உற்பத்தியை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டது. பின்வருவன இவற்றில் அடங்கும்.

| |
|---|
| **நிகர பூஜ்ஜிய தொழில் சட்டம் (NZIA)** |
| **முக்கிய மூலப்பொருட்கள் சட்டம் (CRMA)** |

11. உலகின் **மூன்றாவது பெரிய தொழில் முனைவோர் நாடாக** இந்தியா உள்ளது என்று நாஸ்காம் அறிக்கை கூறுகிறது. உலகில் உள்ள **யூனிகார்ன்களின் எண்ணிக்கையில்** இந்தியா இரண்டாவது இடத்தில் உள்ளது.

12. 2023 இல், இந்தியாவும் ஐக்கிய அரபு அமீரகம் CEPA ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட ஓராண்டைக் கொண்டாடின. (விரிவான பொருளாதார கூட்டு ஒப்பந்தம்)

13. டெல்லியில் முதல் தேசிய மெட்ரோ இரயில் அறிவுசார் மையம் அமைக்கப்பட உள்ளது.

14. **FCRA, 2010** இன் கீழ் வெளிநாட்டு பங்களிப்புகளை பாரத ஸ்டேட் வங்கி புது டெல்லியின் முதன்மைக் கிளையின் "FCRA கணக்கில்" மட்டுமே பெற வேண்டும் என்று இந்திய ரிசர்வ் வங்கி அறிவிக்கிறது.

| **FCRA கணக்கிற்கான பங்களிப்புகள்** | |
|---|---|
| **இருந்து பெறப்பட்டது** | மூலம் பெறப்பட்டது |
| **வெளிநாட்டு வங்கிகள்** | ஸ்விஃப்ட் |
| **இந்திய இடைநிலை வங்கிகள்** | NEFT மற்றும் RTGS அமைப்புகள் |

15. **தெற்காசியாவில் விநியோக சேவைகளை நவீனமயமாக்குவதற்காக தெற்காசிய விநியோகப் பயன்பாட்டு வலையமைப்பு (SADUN)** தொடங்கப்பட்டது. இது மின்சார அமைச்சகம், USAID மற்றும் PFC ஆகியவற்றின் கூட்டு முயற்சியாகும்.

16. **உலகின் ஆறாவது பெரிய பங்குச் சந்தையாக இருந்த** இந்தியாவை இங்கிலாந்து முந்தியது.

17. தேசிய பங்குச் சந்தையானது அதன் **சமூகப் பங்குச் சந்தையைத்** தொடங்க **SEBI யின் அனுமதியைப் பெற்றுள்ளது.**

18. மகாராஷ்டிர மாநிலம் **நாக்பூரில் உள்ள அனுபூதி உள்ளடங்கிய பூங்காவில்** உலகின் மிகப்பெரிய மாற்றுத் திறனாளிகள் பூங்கா தொடங்கப்பட்டது.

SHANKAR IAS ACADEMY ZERO CURRENT AFFAIRS

19. 2030-ம் ஆண்டுக்குள் 450 மில்லியன் டன் எண்ணெய் சுத்திகரிப்பு திறன் என்ற இலக்கை எட்டுவதற்காக இராஜஸ்தான் மாநிலம் பார்மரில் பசுமை சுத்திகரிப்பு நிலையம் மற்றும் பெட்ரோ கெமிக்கல் வளாகம் அமைக்கப்பட்டு வருகிறது. (பார்மர் சுத்திகரிப்பு நிலையம் – பாலைவனத்தின் அணிகலன்)

20. **மேற்கு மற்றும் மத்திய மண்டலத்திற்கான முதல் பிரதம மந்திரி கதிசக்தி** பிராந்திய பயிலரங்கம் கோவாவில் நடைபெற்றது.

21. **சர்வதேச நாணய நிதியம் அதன் உலகப் பொருளாதாரக் கண்ணோட்டம் (WEO) புதுப்பிப்பை** வெளியிட்டுள்ளது, இது 2022 இல் உலகளாவிய வளர்ச்சி 3.4% என மதிப்பிடப்பட்டுள்ளது, இப்போது 2024 இல் 3.1% ஆக உயரும் முன் 2023 இல் 2.9% ஆகக் குறையும் என்று கணிக்கப்பட்டுள்ளது.

## *புவியியல்*

1. **மைக்ரோசாப்ட் நிறுவனம் எல்லோரா திட்டத்தை** அறிமுகப்படுத்தியது (குறைந்த வள மொழிகளை இயக்குதல்) என்பது கோண்டி மற்றும் முண்டாரி போன்ற **'அரிதான' இந்திய மொழிகளை** இணையத்தில் கொண்டுவருவதற்கான ஒரு முயற்சியாகும்.

2. ரிக்டர் அளவுகோலில் **7.8, 7.6 மற்றும் 6.0 ரிக்டர் அளவுள்ள** மூன்று நிலநடுக்கங்கள் **துருக்கி மற்றும் சிரியாவில் பேரழிவை ஏற்படுத்தியுள்ளன.**

3. ஜம்மு-காஷ்மீரின் ரேசி மாவட்டத்தில் உள்ள சாலல்-ஹைமானா பகுதியில் முதல் முறையாக சுமார் 6 மில்லியன் டன் லித்தியம் ஆதாரங்கள் இருப்பதாக இந்திய புவியியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

4. **ஜமைக்காவை** தலைமையிடமாகக் கொண்ட **சர்வதேச கடற்பரப்பு ஆணையம்** இந்தியாவை **"முன்னோடி முதலீட்டாளராக"** அதிகாரப்பூர்வமாக நியமித்துள்ளது.

5. **உணவு மற்றும் வேளாண்மை** அமைப்பின் பெருநிறுவன புள்ளியியல் தரவுத்தளத்தின் (FAOSTAT)படி, **2021-22** ஆம் ஆண்டில் உலகளாவிய பால் உற்பத்தியில் **24% பங்களிப்பு** செய்யும் உலகின் மிக உயர்ந்த பால் உற்பத்தியாளராக **இந்தியா** உள்ளது.

6. **கேப்ரியல் சூறாவளி (வகை 3 சூறாவளி)** நியூசிலாந்து கடற்கரையைத் தாக்கியது மற்றும் அரசாங்கம் அதை அவசரநிலையாக அறிவித்தது.

7. **தினை ஆராய்ச்சி மற்றும் விழிப்புணர்வுக்கான சர்வதேச முயற்சியை** (MIIRA) இந்திய அரசு தொடங்க உள்ளது. ஒவ்வொரு G20 உறுப்பினரும் அதன் வரவு செலவுத் திட்டத்தில் உறுப்பினர் கட்டணமாக "விதைப் பணத்தை" பங்களிக்க வேண்டும்.

8. ஷிங்கு லா சுரங்கப்பாதை **யோஜக் திட்டத்தின்** ஒரு பகுதியாகும். இது BRO ஆல் செயல்படுத்தப்பட்டு **மணாலி – லே** வழியை ஆண்டு முழுவதும் அணுகக்கூடியதாக மாற்றுகிறது. **ஹெச்பி மற்றும் லடாக்** இடையே அமைந்துள்ளது.

SHANKAR IAS ACADEMY ZERO CURRENT AFFAIRS

9. நாசா **மம்மடஸ் மேகங்களை வெளியிட்டது**. இது ஒரு மேகத்தின் அடிப்பகுதியில் **தொங்கும்** செல்லுலார் வடிவமாகும். பொதுவாக ஒரு கார்திரள் மழைமேகமாகும்.

10. **லடாக்கில்** உள்ள பாங்கோங் **த்சோ ஏரியானது, தோராயமாக** 13,862 அடி உயரத்தில் முதன்முறையாக **உறைந்த ஏரி மாரத்தான் போட்டியை நடத்தும்**.

## *கலாச்சாரம்*

1. கலா **கோடா கலை விழா மும்பையில் கொண்டாடப்படும்** ஒரு தனித்துவமான விழாவாகும்.

2. **தென் கொரியாவின் சாங்வோல் சொசைட்டி** இந்தியாவில் நடைபயண யாத்திரையை ஏற்பாடு செய்துள்ளது. இதன் கீழ், 108 பௌத்தர்கள் இந்தியாவில் 1,100 கிலோமீட்டர் தூரம் நடந்து செல்வார்கள்.

3. பழங்குடியினர் விவகார அமைச்சகம் ஆடி மஹோத்ஸவ் திருவிழாவைத் தொடங்கியது. இது புதுடெல்லியில் கொண்டாடப்படும் 10 நாள் பண்டிகையாகும். கருப்பொருள்: **ஆதி மஹோத்சவ் திருவிழா: பழங்குடியினரின் கைவினைப்பொருட்கள், கலாச்சாரம், உணவு வகைகள் மற்றும் வர்த்தகத்தின் ஒரு கொண்டாட்டம்**.

4. **உஸ்தாத் பிஸ்மில்லா கான் யுவா புரஸ்கார் சங்கீத்தால்** இசை, நாடகம்,நடனம் ஆகிய துறைகளில் சிறந்து விளங்கும் கலைஞர்களுக்கு விருது வழங்குகிறது.

5. **BHASHINI திட்டமானது, குரல் அடிப்படையிலான அணுகல்** உட்பட இந்திய மொழிகளில் **இணையம் மற்றும் டிஜிட்டல் சேவைகளை** எளிதாக அணுகுவதற்கும், இந்திய மொழிகளில் உள்ளடக்கத்தை உருவாக்குவதற்கும் உதவுகிறது.

6. **1875** ஆம் ஆண்டு ஆரிய சமாஜ் அமைப்பை நிறுவிய **சுவாமி தயானந்த சரஸ்வதியின் 200வது** பிறந்தநாளை நினைவுகூரும் நிகழ்ச்சிகளை பிரதமர் தொடங்கி வைத்தார்.

7. மத்தியப் பிரதேசத்தின் கஜுராஹோவில் கலாச்சாரத்துக்கான **முதல் ஜி20 செயற்குழு கூட்டம்** தொடங்கியது.

8. **தாதாசாகேப் பால்கே சர்வதேச திரைப்பட** விழா :

   I. சிறந்த நடிகர்: ரன்பீர் கபூர்
   II. சிறந்த நடிகை: ஆலியா பட்

| விருது | |
|---|---|
| **தாதாசாகேப் பால்கே சர்வதேச திரைப்பட விழா விருதுகள்** | அவரது பேரனால் ஏற்பாடு செய்யப்பட்ட சுதந்திர பெரு நிறுவன திரைப்பட விழா |
| **தாதாசாகேப் பால்கே விருது** | திரைப்பட விழாக்களின் இயக்குநரகம், இந்திய அரசு |

SHANKAR IAS ACADEMY ZERO CURRENT AFFAIRS

9. 2019, 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளுக்கான **சங்கீத நாடக அகாடமி** உதவித்தொகை மற்றும் **சங்கீத நாடக விருதுகளை** 100க்கும் மேற்பட்ட புகழ்பெற்ற கலைஞர்களுக்கு குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு வழங்கவுள்ளார்.

10. **கேரளாவில் உள்ள ஸ்ரீ கிருஷ்ணர் கோவிலில்** இந்திய வரலாற்றில் முதல் முறையாக **இயந்திர யானை** அறிமுகப்படுத்தப்பட்டது. அது கோவில் சடங்குகளை இங்கு செய்யும்.

## *சுற்றுச்சூழல்*

1. 4,820 மீட்டர் உயரத்தில் அமைந்துள்ள அழகிய ஏரிக்காக **பறவைகளின் சொர்க்கம்** என்று அழைக்கப்படும் **யாயா சோ, லடாக்கின் முதல் பல்லுயிர் பாரம்பரிய தளமாக** (BHS) **முன்மொழியப்பட்டது.**

2. **மிஷ்டி** (கரையோர வாழ்விடங்கள் மற்றும் உறுதியான வருமானங்களுக்கான சதுப்புநில முன்முயற்சி) **"சதுப்புநிலக் காடுகளைப் பாதுகாப்பதை"** நோக்கமாகக் கொண்டுள்ளது.

3. MOEFCC ஆனது **சதுப்பு நிலங்களை பாதுகாருங்கள்** எனும் பிரச்சாரத்தை தொடங்கியது.

4. **H5N1 பறவைக் காய்ச்சல் வைரஸ்** காரணமாக **585 கடல் சிங்கங்களும்** 55,000 **காட்டுப் பறவைகளும்** இறந்ததாக **பெரு** அறிவித்தது.

5. **இராஜஸ்தான் அரசு சதுப்பு நிலங்களின் அகலிட அழிவுறா காத்தல் அமைப்பு** (WESCE) திட்டத்தை அறிவித்தது. இது **கியோலாடியோ தேசிய பூங்காவிற்குள்** தொடங்கப்பட்டது. பிரான்சால் நிதியளிக்கப்பட்டது.

6. தென்னாப்பிரிக்காவுடன் **12 சிறுத்தைகளை மத்திய பிரதேசத்தில் உள்ள** குனோ **பல்பூர்** தேசிய பூங்காவுக்கு மாற்ற இந்தியா ஒப்பந்தம் செய்துள்ளது. இது உலகில் **முதன் முதலில் கண்டங்களுக்கு இடையில் மேற்கொள்ளப்படும்** சிவிங்கிப் புலிகளின் **பரிமாற்றமாகும்**.

7. **ஜல் சக்தி அமைச்சகம்** மற்றும் **பிரம்மா குமாரிஸ் அமைப்பு** ஆகியவை இந்த **ஜல் ஜன அபியானை** செயல்படுத்தும். நோக்கம்: **நீர் பாதுகாப்பு**

8. உமிழ்வுகளை குறைப்பதற்காக **2035** ஆம் ஆண்டுக்குள் **டீசல் மற்றும் எரிவாயு கார்களின் விற்பனையை** தடை செய்ய **ஐரோப்பிய ஒன்றியம்** ஒரு சட்டத்தை நிறைவேற்றியுள்ளது.

9. **ஐக்கிய நாடுகளின் பாதுகாப்பு கவுன்சில்**, கடல் மட்ட உயர்வினால் ஏற்படும் அபாயங்கள் குறித்து வலியுறுத்தவும் எச்சரிக்கவும் **"UNTHINKABLE"** என்ற வார்த்தையைப் பயன்படுத்தியது.

10. ஐக்கிய அரபு அமீரகம் மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளின் கூட்டு முயற்சியாக, **காலநிலைக்கான வேளாண் புத்தாக்க இயக்கம்** தொடங்கப்பட்டுள்ளது. நோக்கம்: **பசி மற்றும் பருவநிலை மாற்றத்தை எதிர்கொள்ளுதல்.**

SHANKAR IAS ACADEMY ZERO CURRENT AFFAIRS

11. இஸ்ரேல், நெதர்லாந்து மற்றும் அமெரிக்காவில் உள்ள மாதிரி மையங்களின் அடிப்படையில் பழ பயிர் உற்பத்தியை அதிகரிக்க **10 சுத்தமான தாவர மையங்களை** உருவாக்க மத்திய அரசு திட்டமிட்டுள்ளது.

12. இந்தியாவின் முதல் மெரினாவானது கர்நாடகாவின் உடுப்பி மாவட்டத்தில் உள்ள பைண்டூர் (சோமேஸ்வர கடற்கரை) பகுதியில் அமைக்கப்படும்.

13. **தரோய் பறவைகள் கணக்கெடுப்பு** குஜராத்தில் உள்ள **தரோய் நீர்த்தேக்கத்தில்** நடத்தப்பட்டது

14. **புல்வெளிகளில்** மண் கார்பனின் **முதல் உலகளாவிய மதிப்பீட்டை FAO** வெளியிடுகிறது. இது **மண் கரிம கார்பன் (SOC) இருப்புகளின்** அடிப்படை அளவை அளவிட்டது. FAO, Grasslands இல் மண் கார்பனின் **1வது உலகளாவிய** மதிப்பீட்டை வெளியிடுகிறது. இது **மண் ஆர்கானிக் கார்பன்** (**SOC)** பங்குகளின் அடிப்படையை அளந்தது.

15. **தெலுங்கானாவின் சிங்கரேனி வெப்ப மின் நிலையம்** தெற்கில் முதல் பொதுத்துறை நிலக்கரி அடிப்படையிலான மின் உற்பத்தி நிலையமாகவும், நாட்டின் மாநில பொதுத்துறை நிறுவனங்களில் முதல் இடத்திலும் திகழும்.

16. **காபோன், ஜமைக்கா மற்றும் இலங்கை** ஆகிய நாடுகள் சருமத்தை ஒளிரச் செய்யும் பொருட்களில் **பாதரசத்தைப்** பயன்படுத்துவதைத் தவிர்க்க **$14 மில்லியன்** டாலர் திட்டத்தில் இணைந்துள்ளதாக UNEP அறிவித்துள்ளது.

17. ஆர்பர் டே அறக்கட்டளையின் **"உலகின் சிறந்த மரம் நகர விருதை" ஹைதராபாத்** வென்றது

18. சர்வதேச தோட்டக்கலை உற்பத்தியாளர்கள் சங்கத்தின் (IAHP) **'உலக பசுமை நகரம்'** விருதை **ஹைதராபாத்** வென்றுள்ளது.

19. **நிலக்கரி இந்தியா லிமிடெட்** நிறுவனம், கைவிடப்பட்ட **30 சுரங்கப் பகுதிகளை** சுற்றுச்சூழல் பூங்காக்கள் மற்றும் சுற்றுலாத் தலங்களாக மாற்றியுள்ளது.

SHANKAR IAS ACADEMY ZERO CURRENT AFFAIRS

## *அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்*

1. **ஆக்மென்டட் ரியாலிட்டி / விர்ச்சுவல் ரியாலிட்டி / மிக்ஸ்டு ரியாலிட்டி** (AR/VR/MR) ஆகியவற்றைப் பயன்படுத்தி இந்திய விண்வெளிப் பயணத் திட்டத்திற்கான **பயிற்சித் தொகுதியை** உருவாக்க **இஸ்ரோ மற்றும் ஐஐடி மெட்ராஸ்** திட்டமிட்டுள்ளன.

2. இந்தியாவின் முதல் **ஹைட்ரஜன் உள் எரிப்பு இயந்திர (H2ICE)** **தொழில்நுட்பம் ரிலையன்ஸ் இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட் (RIL)** **மற்றும் அசோக் லேலண்ட் ஆகியவற்றால் கனரக லாரிகளுக்காக** அறிமுகப்படுத்தப்பட்டது.

3. **சாட்போட் :**

| சாட்போட் | உரிமம் |
|---|---|
| **ChatGPT** | மைக்ரோசாப்ட் ஆதரவு நிறுவனம் OpenAI |
| **Bard** | கூகுள் |
| **Bal Mitra – Whatsapp Chatbot** | குழந்தைகள் உரிமைகள் பாதுகாப்புக்கான டெல்லி ஆணையம் |
| **Ernie Bot** | சீன தேடுபொறி – **Baidu** |
| **Lexi** | ChatGPT இயங்கும் செயற்கை நுண்ணறிவு **சாட்போட் மூலம் இயங்கும் இந்தியாவின் முதல் AI உதவியாளர்** |
| **Ama KrushAI** | இந்தியாவின் முதல் வேளாண் சாட்போட், **ஒடிசாவில்** தொடங்கப்பட்டது |
| **LLaMA** | **META** தனது சாட்போட் **LAMA** ஐ அறிமுகப்படுத்தியுள்ளது. |

4. அமெரிக்காவின் கலிபோர்னியா பாலைவனத்தில் உள்ள அதன் விமான ஆய்வுக்கூடத்தில் NASA தனது முதல் **முழு மின்சார சோதனை விமானத்தை X-57 "மேக்ஸ்வெல்"** என பெயரிடப்பட்டது.

5. **ஜிஎஸ்டி நுண்ணறிவு இயக்குநரகம் (DGGI)** டிஜிட்டல் தடயவியல் ஆய்வகங்களைத் தொடங்க **தேசிய தடயவியல் அறிவியல் பல்கலைக்கழகத்துடன்** (NFSU) கைகோர்த்துள்ளது.

6. ட்ரோன்களுக்கான **இந்தியாவின் முதல் போக்குவரத்து மேலாண்மை அமைப்பை ஸ்கை** ஏர் அறிமுகப்படுத்தியது.

7. **ப்ளூ ஆரிஜின்** காந்தப்புலத்தை ஆய்வு செய்வதற்காக **செவ்வாய் கிரகத்திற்கு** ஒரு பயணத்தைத் தொடங்க நாசாவுடன் ஜெஃப் பெசோஸ் தலைமையானது கையெழுத்திட்டது.

8. Escape மற்றும் Plasma Acceleration and Dynamics Explorers (EscaPADE) என்பது அயனி மற்றும் **செவ்வாய் கிரகத்தில்** இருந்து தப்பி சிதறும் அயனி ஆகியவற்றை ஆய்வு செய்வதற்கான **இரட்டை-விண்கலத்** திட்டமாகும். இது நாசாவின் கிரக ஆய்வுக்கான சிறிய புதுமையான செயல் **(சிம்ப்ளக்ஸ்) திட்டத்தின்** ஒரு பகுதியாகும்.

9. ஸ்ரீஹரிகோட்டாவில் இருந்து **சிறிய செயற்கைக்கோள் ஏவுதல் வாகனத்தின்** (SSLV-D2) இரண்டாவது பதிப்பை இஸ்ரோ அறிமுகப்படுத்தியது. இது EOS-07, Azaadi SAT-2 மற்றும் Janus-1 செயற்கைக்கோள்களை வீழ்த்தியது. இது **3 நிலை ஏவுகணை வாகனம்**.

10. **வெளிநாட்டுப் பயணிகளுக்கான UPI கட்டண விதி 2023 :** உள்வரும் அனைத்து வெளிநாட்டுப் பயணிகளும் இந்தியாவில் இருக்கும் போது தங்கள் வணிகப் பணம் செலுத்துவதற்காக **UPI கட்டணங்களைப் பயன்படுத்த** அனுமதிக்க RBI முடிவு செய்துள்ளது.

SHANKAR IAS ACADEMY ZERO CURRENT AFFAIRS

11. ஸ்பேஸ்எக்ஸ் ஸ்டார்ஷிப் **நிலையான தீ சோதனையை** (மீண்டும் பயன்படுத்தக்கூடிய ராக்கெட்) வெற்றிகரமாக முடித்துள்ளது.

- சந்திரனில் விண்வெளி வீரர்களை தரையிறக்க நாசாவின் **ஆர்ட்டெமிஸ் III** பணியில் இது பயன்படுத்தப்படும்.

12. **ALMA-**ஐப் பயன்படுத்தி **கருப்பு அண்டத்தை** அல்லது **கண்ணுக்கு தெரியாத அண்டத்தைக்** கண்டுபிடித்துள்ளனர். (Atacama Large Millimtre Array).

13. **வெட்டுக்கிளிகளின் முனைகளைப்** பயன்படுத்தி **மோப்பம் பிடிக்கும் ரோபோக்களை** உருவாக்கியுள்ளனர். இது பயோ-ஹைப்ரிட் எனவே அதன் மோப்ப சக்திகள் மின்னணு ஸ்னிஃபர்களை விட அதிகம்.

14. **ஈக்வடோரியல் கினியாவில் மார்பர்க் நோய்** வெடித்ததை WHO சமீபத்தில் உறுதிப்படுத்தியது.

| | |
|---|---|
| **நோய் வகை** | வைரஸ் (மார்பர்க் வைரஸ்) |
| **பரவும் முறை** | வௌவால்கள் |

15. ஒரு அமெரிக்க விஞ்ஞானி **குவாசிபடிகங்களைக்** கண்டுபிடித்தார். அதன் **அணு அமைப்பு மீண்டும் மீண்டும் வராது**. அவை அரை-படிகங்கள் என்று அழைக்கப்படுகின்றன. இது தற்செயலாக **மின்சார வெளியேற்றத்திலிருந்து** உருவானது.

16. **தெலுங்கானா** மாநிலத்தில் உள்ள வேப்ப மரங்கள் பூஞ்சையால் பாதிக்கப்பட்டுள்ளன.

| | |
|---|---|
| **பூஞ்சை நோயின் பெயர்** | **ட்விக் ப்ளைட்** |
| **பூஞ்சையின் பெயர்** | ஃபோமோப்சிஸ் அசாடிராக்டே |

17. இந்தியாவின் முதல் கடல்சார் இடஞ்சார்ந்த திட்டமிடல் கட்டமைப்பு புதுச்சேரியில் தொடங்கப்பட்டது. இந்தோ-நார்வே பெருங்கடல் முன்முயற்சியின் கீழ் இது செயல்படுத்தப்படுகிறது.

18. **ஐஐடி கான்பூர் கனிமங்களைக் கொண்டு செல்வதற்கான** ஆற்றல் **திறன் கொண்ட அமைப்பை** உருவாக்குகிறது.

19. இந்தியாவின் முதல் கழிவுகளை ஹைட்ரஜனாக மாற்றும் ஆலை புனேவில் அமைக்கப்பட உள்ளது. இது பிளாஸ்மா வாயுமயமாக்கல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தும்.

20. **காசநோய் எதிர்ப்பு மருந்துகளை** வழங்க வெர்டிபிளேன் **எக்ஸ்3 ட்ரோன்** டெஹ்ரி கர்வாலில் சோதனை முறையில் பயன்படுத்தப்பட்டது.

21. **வட இந்தியாவில் முதலாவது** அணுமின் **நிலையம் கோரக்பூரில் (ஹரியானா)** கட்டப்பட உள்ளது. இது 2800 மெகாவாட் உற்பத்தி செய்யும்.

22. **சந்திரயான் 3-ன் லேண்டர் பகுதியின் EMI-EMC சோதனை** (மின்காந்த சோதனைகள்) வெற்றிகரமாக இருப்பதாக இஸ்ரோ சமீபத்தில் அறிவித்தது.

23. **குறைந்தபட்ச வேகம் 2Mbps கட்டாயமாக பிராட்பேண்ட்** வரையறை மேம்படுத்தப்பட்டது.

24. உலகின் முதல் **மேகக்கணி சார்ந்த செயற்கைக்கோள்** INS -1 வெற்றிகரமாக ஏவப்பட்டது

25. இந்தியாவின் **முதலாவது ஹைபிரிட் சவுண்டிங் ராக்கெட் மூலம்** செங்கல்பட்டில் உள்ள பட்டிபொலம் கிராமத்தில் **ஏபிஜே அப்துல் கலாம் செயற்கைக்கோள் ஏவுகணை வாகனம் மிஷன்-2023** வெற்றிகரமாக ஏவியது.

26. **ஹைதராபாத்தில்** தொற்று நோய்கள் மற்றும் தொற்றுநோய்க்கான தயார் நிலைக்கான **சிறப்பான மையத்தை அமைக்க சீரம் நிறுவனம்** திட்டமிட்டுள்ளது.

27. இந்தியாவின் முதல் **அரைக்கடத்தி உற்பத்தி நிலையம்** குஜராத்தின் **தோலேராவில்** அமைக்கப்பட உள்ளது.

28. **WHO** தெலுங்கானாவில் **mRNA** (மெசஞ்சர் ரிபோநியூக்ளிக் அமிலம்) **தடுப்பூசி மையத்தை** அமைக்கும்.

29. **HD-3385** என்பது **ICAR** இன் காலநிலை **ஸ்மார்ட் கோதுமை வகையாகும்**.

30. **மாட்டு பித்த நோய்** காரணமாக சீனாவுக்கான மாட்டிறைச்சி ஏற்றுமதியை பிரேசில் நிறுத்தி வைத்துள்ளது.

| | |
|---|---|
| **நோய்** | **போவின் ஸ்பாங்கிஃபார்ம் என்செபலோபதி அல்லது மாட்டு பித்த நோய்** |
| **பரிமாற்ற முகவர்** | **ப்ரியான்** |
| **பாதிப்பது** | கால்நடைகளின் நரம்பியல் அமைப்பு |

31. விமானம் மற்றும் கப்பல் தொடர்பான செயல்பாடுகளுக்கு பிராட்பேண்ட் இணைப்பை வழங்குவதற்காக **சீனா லாங் மார்ச் 3பி ராக்கெட்டில் Zhongxing-26** செயற்கைக் கோளை ஏவியது.

32. விண்வெளியில் **சிக்கித் தவிக்கும் விண்வெளி வீரர்களை மீட்டெடுக்க** ரோஸ்கோஸ்மோஸ் ஒரு வெற்று **சோயுஸ் விண்கலத்தை** ஏவியது.

33. குழு -6 **பணியானது நாசா மற்றும் ஸ்பேஸ்எக்ஸ்** ஆகிய இரு நிறுவனங்களின் கூட்டு நடவடிக்கையாகும். இது ஸ்பேஸ்எக்ஸின் பால்கன் **9 ராக்கெட்** மூலம் சர்வதேச விண்வெளி நிலையத்திற்கு கொண்டு செல்லப்படும்.

34. **டஸ்செல்டார்ஃப் நோயாளி** என்று குறிப்பிடப்படும் நபர், குறிப்பிட்ட எச்.ஐ.வி-எதிர்ப்பு **CCR5 டெல்டா 32 மரபணு மாற்றத்தைச் சுமந்து கொண்டு எலும்பு மஜ்ஜை மாற்று அறுவை சிகிச்சைக்குப்** பிறகு, **எச்.ஐ.வி நோயிலிருந்து குணமடைந்த** மூன்றாவது நபர் ஆனார்.

35. இந்தியா டெல்லி மெட்ரோ ரயில் கார்ப்பரேஷனுக்காக உள்நாட்டில் உருவாக்கப்பட்ட முதல் **ஏடிஎஸ் அமைப்பை** (தானியங்கி ரயில் மேற்பார்வை) அறிமுகப்படுத்தியது மற்றும் அதன் **சொந்த ஏடிஎஸ் தயாரிப்புகளைக்** கொண்ட **6வது நாடாக** மாறியது.

36. ஜப்பானில் **Kamioka Liquid Scintillator Antineutrino Detector (KamLAND)** பரிசோதனையில் **நியூட்ரினோக்கள் அவற்றின் சொந்த எதிர் துகள்கள்** என்பதற்கு எந்த **ஆதாரமும் இல்லை.**

37. சமீபத்திய கண்டுபிடிப்பு வியாழனுக்கு **மேலும் 12 துணைக்கோள்கள் இருப்பதாக** தெரியவந்துள்ளது. இதன் மூலம் வியாழனின் **துணைக்கோள்களின்** எண்ணிக்கை **92** ஆக உயர்ந்துள்ளது. தற்போது **வியாழன் கிரகத்தில் அதிக அளவு துணைக்கோள்கள்** உள்ளன.

## *சர்வதேச தொடர்புகள்*

1. **இந்தியா மற்றும் அமெரிக்காவில்** உள்ள **பாதுகாப்புத் துறை ஸ்டார்ட் அப்களை** இணைக்க உதவும் **முக்கியமான மற்றும் வளர்ந்து வரும் தொழில்நுட்பங்களுக்கான** முன்முயற்சி ICET ஆகும்.

2. **யுனெஸ்கோ உக்ரைனின் ஒடேசாவை** ஆபத்தான இடங்களில் **உலக பாரம்பரிய சின்னமாக** அறிவித்தது.

3. **மாட்ரிட் சர்வதேச புத்தகக் கண்காட்சி** 1993 முதல் ஸ்பெயினில் நடத்தப்படுகிறது.

| ஆண்டு | கருப்பொருள் |
|---|---|
| **2023** | ஸ்பெயின் |
| **2025** | இந்தியா |

4. மின்சார நெருக்கடி காரணமாக **தென்னாப்பிரிக்கா** பேரிடர் நிலையை அறிவித்தது.

5. **நார்ட் ஸ்ட்ரீம்** (அதாவது 'வடக்கு நீரோடை') என்பது ஐரோப்பாவில் உள்ள கடல்வழி இயற்கை எரிவாயு குழாய்களின் வலையமைப்பாகும். இது ரஷ்யாவிலிருந்து ஜெர்மனி வரை **பால்டிக் கடலின்** கீழ் இயங்குகிறது.

6. **ஸ்பெயின் அரசு** சமீபத்தில் **ஊதியத்துடன் கூடிய மாதவிடாய் விடுப்புச் சட்டத்தை** நிறைவேற்றியது.

7. **சாதிப் பாகுபாட்டைத் தடை செய்த** அமெரிக்காவின் முதல் நகரமாக சியாட் வரலாறு படைத்தது

8. ஐ.நா பொதுச் சபை உக்ரைனில் பகைமையை முடிவுக்குக் கொண்டு வர ரஷ்யாவிற்கு அழைப்பு விடுக்கும் மற்றும் அதன் படைகளை திரும்பப் பெறக் கோரும் **கட்டுப்பாடற்ற தீர்மானத்திற்கு ஒப்புதல் அளித்தது.**

SHANKAR IAS ACADEMY ZERO CURRENT AFFAIRS

9. உலக வங்கியை வழிநடத்த முன்னாள் மாஸ்டர்கார்டு தலைமை நிர்வாகி **அஜய் பங்காவை** பரிந்துரை செய்யப்பட்டார் .

10. சர்வதேச **நாணய நிதியம்** உலகில் பண இறையாண்மையைப் **பாதுகாப்பதற்காக கிரிப்டோ செயல் திட்டத்தை** வெளியிட்டது.

## *தேசிய செய்திகள்*

1. கோவா அரசு அனைத்து பள்ளிகளிலும் **கண் சுகாதாரத்திற்கான தொலைநோக்கு திட்டத்தை** அறிமுகப்படுத்தியுள்ளது.

2. **சர்வதேச சூரிய ஆற்றல் கூட்டணிக்கு காங்கோவை** இந்தியா வரவேற்றுள்ளது.

3. சுற்றுலா அமைச்சகம் **இந்தியா வருகை ஆண்டு – 2023** முன்முயற்சி திட்டத்தை அறிமுகப்படுத்தியது.

4. அமெரிக்காவை தளமாகக் கொண்ட ஆலோசனை நிறுவனமான **மார்னிங் கன்சல்ட்** நடத்திய ஆய்வின்படி, பிரதமர் நரேந்திர மோடி **உலகின் மிகவும் பிரபலமான தலைவராக 78 சதவீத** ஆதரவு மதிப்பீட்டை பெற்றுள்ளார்.

5. 75வது சுதந்திர தினத்தை கொண்டாடும் வேளையில் குடியரசுத் தலைவர் செயலக வளாகத்தில் இந்தியா 50 பேருந்துகளை இலங்கைக்கு வழங்கியது.

6. **நடாஷா பெரியநாயகம்**, திறமையான இளைஞர்களுக்கான ஜான்ஸ் ஹாப்கின்ஸ் மையத்தின் **"உலகின் பிரகாசமான" மாணவர்கள்** பட்டியலில் தொடர்ச்சியாக இரண்டாவது ஆண்டாக இடம் பெற்றுள்ளார்.

7. **மத்தியப் பிரதேச** அரசு போபாலின் இஸ்லாம் நகர் கிராமத்தின் பெயரை 'ஜகதீஷ்பூர்' என மாற்றியுள்ளது.

8. **இந்தியா** மற்றும் **ஐரோப்பிய ஒன்றியம்** வர்த்தக மற்றும் **தொழில்நுட்பக் குழுவை நிறுவியது**.

9. **இந்திய அஞ்சல்** துறையானது டெல்லியில் **AMRITPEX 2023** (தேசிய தபால்தலை கண்காட்சி) நடத்துகிறது.

10. **ALH Mk3 ஹெலிகாப்டர்களை மொரிஷியஸுக்கு** ஏற்றுமதி செய்வதற்கான ஒப்பந்தத்தில் இந்தியா கையெழுத்திட்டது.

11. **இந்தூர் ஐஐடி மாணவர்களுக்கு** எகிப்து அதிபர் **உலகளாவிய சிறந்த எம்-கோவ் விருதுகள்** வழங்கினார்

12. **கேரள உயர் நீதிமன்றம்** தனது தீர்ப்பை பிராந்திய மொழியில் வெளியிடும் நாட்டிலேயே முதல் மாநிலமாக மாறியது.

SHANKAR IAS ACADEMY ZERO CURRENT AFFAIRS

13. **JADUI PITARA** என்பது **3 முதல் 8** வயது வரையிலான குழந்தைகளுக்கான விளையாட்டு அடிப்படையிலான கற்றல் கருவியாகும். நோக்கம்: **விளையாடுவதன் மூலம் கற்றுக்கொள்ளுங்கள்**

14. **கேரளா (குருவாயூர்) பாண்டிகூட் ரோபோ ஸ்காவெஞ்சர்களை** அறிமுகப்படுத்திய முதல் மாநிலமாக மாறியுள்ளது.

15. பட்ஜெட்டின் போது தினை **ஸ்ரீ அண்ணா** என்ற சர்வதேச பிராண்ட் பெயரை அறிமுகப்படுத்தியது.

16. **இமாச்சலப் பிரதேசம்** முதன்முறையாக மதுபானத்தின் **(முலேதி)** வணிகப் பயிர்ச்செய்கையைத் தொடங்கியுள்ளது. (இனிப்பு சுவை கொண்ட வற்றாத புதர், இது சுக்ரோஸை விட 50 மடங்கு இனிமையானது)

17. **கர்நாடகாவில் ஷிவமொக்கா விமான நிலையம்** திறக்கப்பட்டது. இது ஞானபீடம் விருது பெற்ற **மகாகவி குவேம்புவின்** பெயரால் அழைக்கப்படும்.

18. **அத்விகா தளம் ஒடிசாவால்** பெண்களை இலக்காகக் கொண்ட அனைத்து திட்டங்களையும் ஒரு மேடையில் இணைக்க தொடங்கப்பட்டது (ஆத்விகா – ஒவ்வொரு பெண்ணும் தனித்துவமானது)

19. **ஆந்திர மாநிலம் விசாகப்பட்டினத்தை** தனது புதிய தலைநகராக அறிவித்துள்ளது.

20. **2047–க்குள் அரிவாள் செல் இரத்த சோகையை** ஒழிக்கும் திட்டம்.

| | |
|---|---|
| **இலக்கு குழு** | **பழங்குடியினர் பகுதிகளில் 0 முதல் 40 வயது வரை உள்ளவர்கள்** |
| **நிதியுதவி** | **தேசிய சுகாதார இயக்கத்தின்** கீழ் |

## *தமிழ்நாடு செய்திகள்*

1. முந்தைய **கீழடி** சங்க காலம் **கிமு 300** என்று நம்பப்பட்டது. ஆனால் கீழடியில் நடந்த அகழ்வாராய்ச்சியில் சங்க காலம் **பழமையானது என்றும் கிமு 800க்கு** முந்தையது என்றும் தெரியவந்தது.

2. உலக சதுப்பு நில தினத்தை முன்னிட்டு **பள்ளிக்கரணை சதுப்பு நிலத்திற்கான** ராம்சார் தள சின்னத்தை வனத்துறையினர் வெளியிட்டனர்.

3. தொழில்கள், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறையின் **தமிழ்நாடு மின்சார வாகனக் கொள்கை – 2023**ஐ முதல்வர் வெளியிட்டார்.

4. தமிழ்நாடு அரசு **டி.எம்.டி. சத்தியவாணிமுத்து அம்மையாரின்** நூற்றாண்டு பிறந்த நாளைக் கொண்டாடுகிறது (15 பிப்ரவரி 1923)

SHANKAR IAS ACADEMY ZERO CURRENT AFFAIRS

5. **அகஸ்தியமலை யானைகள்** காப்பகத்தில் (கக்காச்சி, அம்பாசமுத்ரம் பிரிவு) சுற்றுச்சூழல் பூங்காவுடன் உயிரியல் பன்முகத்தன்மை அருங்காட்சியகம் மற்றும் பாதுகாப்பு மையத்தை தமிழக அரசு அமைக்க உள்ளது. இது **களக்காடு முண்டந்துறை புலிகள் காப்பகத்துடன்** நிலப்பரப்பைப் பகிர்ந்து கொள்கிறது.

6. இன்றைய தலைமுறையினர் **தமிழர்களின் நாகரிகத்தைப்** பற்றி மிகக் குறைவாகவே அறிந்திருப்பதால், **இளைய தலைமுறையினருக்கு தமிழ் கலாச்சாரம்** மற்றும் அதன் செழுமையை உணர்த்தும் வகையில் **மாவட்டம் தோறும் 'மாபெரும் தமிழ் கனவு'** நிகழ்ச்சி நடத்தப்பட்டு வருகிறது.

## *விருதுகள் / பரிசு*

| விருது | வழங்கியவர் | விருது பெறுபவர் | அறியப்படுவது |
|---|---|---|---|
| **FIH குடியரசுத் தலைவர் விருது** | FIH ஒடிசா ஹாக்கி ஆண்கள் உலகக் கோப்பை 2023 | வி கார்த்திகேய பாண்டியன் (ஒடிசா முதல்வரின் செயலாளர்) | ஹாக்கியில் அவரது பாராட்டத்தக்க பங்களிப்புக்காக |
| **மாத்ருபூமி புக் ஆஃப் தி இயர் விருது** | மாத்ருபூமி சர்வதேச கடிதத் திருவிழாவின் 4 வது பதிப்பு (MBIFL 2023) | டாக்டர் பெக்கி மோகன் | நூலாசிரியர் |
| **ராஜா ராம் மோகன் ராய் தேசிய விருது** | பிரஸ் கவுன்சில் ஆஃப் இந்தியா | A.B.K. பிரசாத் | பத்திரிகையாளர் |
| **இந்திய குடியரசுத் தலைவரின் காலர் விருது** | இந்திய குடியரசுத் தலைவர் | **ஹரியானா காவல்துறை** | இராணுவப் பிரிவுகள், கூட்டாட்சிப் படைகள் மற்றும் மாநில காவல்துறைப் படைகளுக்கு வழங்கப்படும் மிக உயர்ந்த விருது |
| **யுனெஸ்கோ அமைதி பரிசு** | யுனெஸ்கோ | **ஏஞ்சலா மேர்க்கல்** | • முன்னாள் ஜெர்மன் அதிபர்<br>• **"அகதிகளை வரவேற்கும் அவரது முயற்சிகளுக்கு"** |
| **வெப்பி விருதுகள்** | டிஜிட்டல் கலை மற்றும் அறிவியல் சர்வதேச அகாடமி (IADAS) | Don't Choose Extinction பிரச்சாரம் | காலநிலை அவசரநிலை பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த UNDP ஆல் தொடங்கப்பட்ட ஒரு பிரச்சாரம் |

| | | | |
|---|---|---|---|
| **ஞானப்பனா விருது - 2023** | குருவாயூர் தேவஸ்வம் | கவிஞர் வெ.மதுசூதனன் நாயர் | கவிஞர் |
| **உலக தாய்மொழி விருது** | வங்கதேசத்தின் டாக்காவில் பிரதமர் ஷேக் ஹசீனா. | டாக்டர். மகேந்திர குமார் மிஸ்ரா | ஒடிசாவில் பழங்குடி மொழிகளின் முன்னேற்றத்திற்காக பாடுபட்ட இந்திய கல்வியாளர் மற்றும் சமூக சேவகர் |

| வுல்ஃப் பரிசு ( இஸ்ரேலின் வுல்ஃப் அறக்கட்டளை - 1978 முதல்) | | |
|---|---|---|
| **துறை** | **வெற்றி பெற்றவர்** | **ஆய்வு** |
| **மருத்துவம்** | பேராசிரியர் டேனியல் ட்ரக்கர் | குடல் ஹார்மோன்கள் பற்றிய ஆய்வு |
| **வேளாண்மை** | மார்டினஸ் தி ரீயன் | மண்ணில் மாசடைந்த நீர் கடத்தல் மற்றும் நீர் ஓட்டம் |
| **இயற்பியல்** | கேன் ஜேனுச்டென் | மண் இயற்பியல் மற்றும் வடோஸ் மண்டலம் |
| **வேதியியல்** | • ஜான் T வில்சன><br>• ஹிரோகி சுகா<br>• ஜெஃப்ரி W கெல்லி | ஆர்என்ஏவின் நோயியல் செயலிழப்புகள் குறித்த ஆய்வு |
| **கணிதம்** | இங்க்ரிட் டௌபெசஸ் | வேவ்லெட் கோட்பாடு மீது |
| **கலை** | • ஜப்பானின் புஜிகோ நகயா<br>• இங்கிலாந்தின் ரிச்சர்ட் லாங் | |

## ***செய்திகளில் இடம்பெற்ற முக்கிய நபர்கள்***

| நபர் | செய்திகளில் இடம்பெற காரணம்? |
|---|---|
| **மனுவேலா ரோகா போட்டே** | **எக்குவடோரியல் கினியாவின்** முதல் பெண் பிரதமர் என்ற பெருமையைப் பெற்றார் |
| **டாக்டர் அமி பெரா (இந்திய வம்சாவளி)** | உளவுத்துறை தொடர்பான **விஷயங்களைக் கையாளும் அமெரிக்க ஹவுஸ் கமிட்டியின்** உறுப்பினர் |
| **ஷமிகா ரவி** | பிரதமருக்கான **பொருளாதார ஆலோசனைக் குழு** உறுப்பினர் (EAC-PM) |

| | |
|---|---|
| **அப்சரா ஐயர்** | தி ஹார்வர்ட் லா ரிவியூவின் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் **இந்திய-அமெரிக்க** பெண்மணி |
| **லக்ஷ்மண சந்திர விக்டோரியா கௌரி** | **சென்னை உயர் நீதிமன்ற கூடுதல் நீதிபதி** |
| **அப்துல் நசீர்** | • ஓய்வுபெற்ற உச்ச நீதிமன்ற நீதிபதி.<br>• **ஆந்திர மாநில ஆளுநராக** நியமிக்கப்பட்டார் |
| **ரய்யானா பர்னாவி** | • விண்வெளிக்கு பயணம் செய்த **முதல் அரபு பெண்.**<br>• **பால்கன் 9 இராக்கெட்டில்** போர் விமானி **அலி அல்- கர்னியுடன்** சர்வதேச விண்வெளி நிலையத்திற்கு சென்றார் |
| **விவேக் இராமசாமி** | • இந்திய அமெரிக்கர்<br>• 2024 இல் அமெரிக்க குடியரசுத்தலைவர் தேர்தலுக்கான **குடியரசுக் கட்சி வேட்பாளர்.** |
| **டேவிட் ராபர்ட் மால்பாஸ்** | உலக வங்கியின் தலைவர் பதவியில் இருந்து விலகினார் |
| **பிவிஆர் சுப்ரமணியம்** | **நிதி ஆயோக்கின் தலைமை நிர்வாக அதிகாரியாக** நியமிக்கப்பட்டார் |
| **நிகோஸ் கிறிஸ்டோடுலிட்ஸ்** | சைப்ரஸ் அதிபர் |
| **லெப்டினன்ட் ஜெனரல் எம்வி சுசீந்திர குமார்** | **இராணுவ துணை தளபதி** |
| **நீல் மோகன்** | ஆல்பாபெட் நிறுவனத்திற்கு சொந்தமான **யூடியூப்பின்** தலைமை நிர்வாக அதிகாரி |
| **இயோன் மோர்கன்** | • கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்தார்<br>• **உலகக் கோப்பையை வென்ற இங்கிலாந்து** கேப்டன் |
| **ராஜீவ் சிங் ரகுவன்ஷி** | **இந்திய மருந்துகள் தலைமைக் கட்டுப்பாட்டாளராக** (DCGI) நியமனம் |
| **கனக் ரெலே (காலமானார்)** | மோகினியாட்டம் விரிவுரையாளர்<br>கேரள அரசின் முதலாவது **கோபிநாத் தேசிய புரஸ்காரம்** |
| **ருசிரா கம்போஜ்** | ஐக்கிய நாடுகள் சபையின் 62வது கூட்டத் தொடருக்கான இந்தியாவின் நிரந்தரப் பிரதிநிதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார் |
| **அஃப்ஷான் கான்** | • இந்தோ-கனடியன்<br>• **"ஊட்டச்சத்து இயக்கத்தை அளவிடுதல்"** (ஸ்கேலிங் அப் நியூட்ரிஷன் இயக்கம்) **ஒருங்கிணைப்பாளர்** |
| **சி.பி இராதாகிருஷ்ணன்** | **ஜார்கண்ட் மாநிலத்தின் புதிய ஆளுநராக** நியமிக்கப்பட்டார். |
| **வாணி ஜெயராம்** | • பழம்பெரும் பின்னணி பாடகர் காலமானார்<br>• **"நவீன இந்தியாவின் மீரா"** |

## *செய்திகளில் இடம்பெற்றுள்ள ஆணையங்கள்*

| ஆணையம் | ஆணையத்தின் நோக்கம் |
|---|---|
| **மனோஜ் கோவில் ஆணையம்** | **டிஜிட்டல் போட்டிச் சட்ட வரைவை** ஆராய |
| **உதய் கோடக் ஆணையம்** | **செபியால்** நிறுவப்பட்ட **கார்ப்பரேட் ஆளுகை** |

## *முக்கிய தினங்கள்*

| நாள் | தேதி | கருப்பொருள் |
|---|---|---|
| **தேசிய மகளிர் ஆணையத்தின் 31-வது நிறுவன தினம்** | ஜனவரி 31 | 'சஷாக்த் நாரி சஷக்த் பாரத்' |
| **உலக சமய நல்லிணக்க வாரம்** | பிப்ரவரி 1-7 | – |
| **உலக சதுப்பு நில தினம்** | பிப்ரவரி 2 | இது சதுப்பு நிலங்களை மீட்டெடுப்பதற்கான தருணம் |
| **உலக புற்றுநோய் தினம்** | பிப்ரவரி 4 | "பராமரிப்பு இடைவெளியை நீக்குதல்" |
| **பெண் பிறப்புறுப்பு சிதைத்தலுக்கு எதிரான பூஜ்ஜிய சகிப்புத்தன்மையின் சர்வதேச தினம் (FGM)** | பிப்ரவரி 6 | "FGM ஐ முடிவுக்கு கொண்டுவர சமூக மற்றும் பாலின விதிமுறைகளை மாற்ற ஆண்கள் மற்றும் சிறுவர்களுடனான கூட்டு முயற்சி" |
| **பாதுகாப்பான இணைய நாள்** | பிப்ரவரி 7 | 'அதைப் பற்றி பேச வேண்டுமா?' இணைய வாழ்க்கையைப் பற்றிய உரையாடல்களுக்கான தளத்தை உருவாக்குதல். |
| **கொத்தடிமைத் தொழிலாளர் முறை ஒழிப்பு தினம்** | பிப்ரவரி 9 | நாட்டிலேயே இதுபோன்ற அறிவிப்பை வெளியிட்ட முதல் மாநிலம் **தமிழ்நாடு**. |
| **உலக பருப்பு தினம்** | பிப்ரவரி 10 | 'நிலையான எதிர்காலத்திற்கான பருப்பு வகைகள்' |
| **சர்வதேச தாய்மொழி தினம்** | பிப்ரவரி 21 | "பன்மொழிக் கல்வி – கல்விமுறையினை மாற்றுவதற்கான அவசியம்." |
| **உலக யுனானி தினம்** | பிப்ரவரி 11 | பொது சுகாதாரத்திற்கான யுனானி மருத்துவம் |

| | | |
|---|---|---|
| **அறிவியலில் பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கான சர்வதேச தினம் 2023** | பிப்ரவரி 11 | **“புதுமைப்படுத்து. ஆர்ப்பாட்டம் செய். உயர்த்து. முன்னெடுத்து (IDEA): நிலையான மற்றும் சமமான வளர்ச்சிக்காக சமூகங்களை முன்னோக்கி கொண்டு வருதல்.** |
| **தேசிய உற்பத்தித்திறன் தினம்** | பிப்ரவரி 12 | **“உற்பத்தி, பசுமை வளர்ச்சி மற்றும் நிலைத்தன்மை: இந்தியாவின் G20 தலைமையைக் கொண்டாடுதல்.”** |
| **தேசிய மகளிர் தினம்** | பிப்ரவரி 13 | சரோஜினி நாயுடுவின் பிறந்தநாளை நினைவுக் கூறுதல் |
| **உலக வானொலி தினம்** | பிப்ரவரி 13 | வானொலி மற்றும் அமைதி |
| **சர்வதேச கால்-கை வலிப்பு தினம்** | பிப்ரவரி மாதத்தின் இரண்டாவது திங்கட்கிழமை | “ஸ்டிக்மா”. |
| **சர்வதேச குழந்தை பருவ புற்றுநோய் தினம்** | **பிப்ரவரி 15** | **‘சிறந்த உயிர்வாழ்வு’** |
| **நிதி கல்வியறிவு வாரம்** | **பிப்ரவரி 13-17** | **“நல்ல நிதி நடத்தை - உங்கள் மீட்பர்”** |
| **அருணாச்சலப் பிரதேச மாநிலம் உருவான தினம்** | பிப்ரவரி 20 | 1987 இல் ஏற்படுத்தப்பட்டது.<br>இது நாட்டின் 24வது மாநிலமாக இருந்தது. |
| **சர்வதேச தாய்மொழி தினம்** | பிப்ரவரி 21 | **பன்மொழி கல்வி - கல்வியை மாற்ற வேண்டிய அவசியம்** |
| **உலக சிந்தனை தினம்** | பிப்ரவரி 22 | ‘நமது உலகம், நமது அமைதியான எதிர்காலம்’ |
| **மத்திய கலால் தினம்** | பிப்ரவரி 24 | – |
| **தமிழ்நாடு பெண் குழந்தைகள் தினம்** | பிப்ரவரி 24 | மறைந்த முதல்வர் செல்வி ஜெ ஜெயலலிதாவின் - 75வது பிறந்தநாளை தமிழக அரசு கொண்டாடுகிறது |
| **தேசிய அறிவியல் தினம் 2023** | பிப்ரவரி 28 | உலகளாவிய நல்வாழ்வுக்கான உலகளாவிய அறிவியல் |

## செய்திகளில் இடம்பெற்ற பாதுகாப்பு துறை நடவடிக்கைகள்

| இராணுவ பயிற்சி | சம்பந்தப்பட்ட நாடுகள் |
|---|---|
| **திரிசக்தி பிரஹார் கூட்டுப் பயிற்சி** | இந்திய இராணுவம், விமானப்படை மற்றும் மத்திய ஆயுதக் காவல் படைகள் (CAPF) |
| **தர்காஷ்** | இந்திய-அமெரிக்க கூட்டுப் பயிற்சி |
| **தர்ம கார்டியன் பயிற்சி** | இந்தியா மற்றும் ஜப்பான் |
| **டஸ்ட்லிக் 2023** | இந்தியா-உஸ்பெகிஸ்தான் ராணுவ பயிற்சி |
| **மலபார் பலதரப்பு கடல்சார் பயிற்சி** | ஆஸ்திரேலியா |
| **பாலைவனக் கொடி VIII** | ஐக்கிய அரபு நாடுகள் மற்றும் இந்தியா |
| **கோப்ரா வாரியர் பயிற்சி** | பன்னாட்டு பயிற்சி |

1. **இந்திய கடலோர காவல்படை தனது 47வது எழுச்சி தினத்தை** பிப்ரவரி 1, 2023 அன்று கொண்டாடியது.
2. இந்திய கணினி அவசரநிலைப் பதிலளிப்புக் குழு (CERT-In) **G20 சைபர் பாதுகாப்பு பயிற்சியை** அறிமுகப்படுத்தியது
3. **பாரத் எலெக்ட்ரானிக்ஸ் லிமிடெட் இஸ்ரேல் ஏரோஸ்பேஸ் இண்டஸ்ட்ரீஸ்** உடன் இந்திய முப்படைகளுக்கான **நீண்ட தூர பீரங்கி ஆயுத அமைப்பை** (LORA) தயாரித்து வழங்குவதற்காக புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது.
4. **ஹ்வாசாங் – 15** என்பது வட **கொரியாவின் மூன்று பெரிய கண்டம்** விட்டு கண்டம் பாயும் ஏவுகணைகளில் (ICBM Intercontinental Ballistic Missile) ஒன்றாகும். வட கொரியாவின் அனைத்து ஐசிபிஎம்களும் திரவ உந்துசக்திகளைப் பயன்படுத்துகின்றன.
5. **அபுதாபியில் நடத்தப்பட்ட NAVDEX** (கடற்படை பாதுகாப்பு கண்காட்சி) மற்றும் IDEX (சர்வதேச பாதுகாப்பு கண்காட்சி) ஆகியவற்றில் **INS சுமேதா** (கடற்படை கடல் ரோந்து கப்பல்கள்) பங்கேற்றது.
6. இந்திய இராணுவம் உலகின் முதலாவது தாக்குதல் திரள் கொண்ட **ஸ்வார்ம் ட்ரோன்** அமைப்பைப் பெறுகிறது.
7. **'பாதுகாப்புச் சிறப்புக்கான கண்டுபிடிப்புகள் (iDEX) முதலீட்டாளர் மையம்'** பாதுகாப்பு அமைச்சகத்தால் தொடங்கப்பட்டது
8. **START ஒப்பந்தத்திலிருந்து** (மூலோபாய ஆயுத குறைப்பு ஒப்பந்தம்) ரஷ்யா விலகியுள்ளது. இது **ரஷ்யா மற்றும் அமெரிக்காவை** அதிகபட்சமாக 1,550 வரிசைப்படுத்தப்பட்ட மூலோபாய அணு ஆயுதங்களாக கட்டுப்படுத்துகிறது மேலும் லாஞ்சர்கள் மற்றும் கனரக குண்டுவீச்சுகளை 800 ஆக கட்டுப்படுத்துகிறது.

9. **ஆபரேஷன் நர்கோஸ்** என்பது இரயில்வே பாதுகாப்புப் படையால் இரயில் மூலம் போதைப்பொருள் கடத்தலுக்கு எதிரான ஒரு இந்திய இயக்கமாகும்.

10. **ஆபரேஷன் சத்பவானா (நல்ல எண்ணம்)** என்பது, பாகிஸ்தானின் ஆதரவோடும், உறுதுணையோடும், பயங்கரவாதத்தின் கோரப்பிடியால் பாதிக்கப்பட்ட மக்களின் அபிலாஷைகளை நிவர்த்தி செய்ய, லடாக், ஜம்மு & காஷ்மீரில் இந்திய ராணுவத்தால் மேற்கொள்ளப்பட்ட ஒரு தனித்துவமான முன்முயற்சியாகும்.

11. **ஆபரேஷன் ஏஏஎச்டி:** கடத்தல்காரர்களிடமிருந்து பாதிக்கப்பட்டவர்களை மீட்பதில் கவனம் செலுத்தும் சிறப்புக் குழுக்கள் அனைத்து நீண்ட தூர இரயில்கள்/வழித்தடங்களிலும் இரயில்வே பாதுகாப்புப் படையால் நிறுத்தப்படும்.

## *செய்திகளில் இடம்பெற்ற முக்கிய இடங்கள்*

| இடத்தின் பெயர் | முக்கியத்துவம் |
|---|---|
| **புது டெல்லி, பிகானர் ஹவுஸில் உள்ள சிற்ப பூங்கா** | பாரம்பரிய கலை மற்றும் கலாச்சார சிற்பங்கள் நிறைந்திருக்கும். |
| **காசியான்டெப் கோட்டை, மேற்கு துருக்கியில் உள்ள காசியான்டெப் மாகாணம்** | நிலநடுக்கத்தின் அளவு 7.8 ரிக்டர் ஆக பதிவாகியுள்ளது. |
| **நியோம் நகரம்** | **அரேபியாவில் தபூக் மாகாணத்தில் ஸ்மார்ட் சிட்டி** திட்டமிடப்பட்டுள்ளது. |
| **டூம்ஸ்டே பனிப்பாறை (த்வைட்ஸ் பனிப் பாறை), அண்டார்டிகா** | பனிப்பாறையில் **பலவீனமான புள்ளிகள்** அதிகரித்து வருவதாக ஆய்வு கூறுகிறது. |

## *குறியீடுகள்*

| அறிக்கை | வெளியிட்டது | தரவரிசை |
|---|---|---|
| இந்திய நிறுவன தரவரிசை கட்டமைப்பின் தரவரிசை (2023) | **கல்வி அமைச்சகம்** | 1 வது - **இந்திய மேலாண்மை நிறுவனம் (IIM), அகமதாபாத்** 2 வது - ஐஐஎம் பெங்களூரு (கர்நாடகா) மற்றும்<br>3 வது - ஐஐஎம் கல்கத்தா (மேற்கு வங்கம்) |
| **உலகளாவிய மகிழ்ச்சி குறியீடு அறிக்கை 2023** | நிலையான வளர்ச்சி தீர்வுகள் கட்டமைப்பு | 1 வது – பின்லாந்து<br>126 – இந்தியா |

| | | |
|---|---|---|
| **உலகளாவிய தர உள்கட்டமைப்பு குறியீடு (GQII) 2021** | சுயாதீன ஆலோசனை நிறுவனங்கள் மெசோபார்ட்னர் மற்றும் அனலிட்டிகார் | 5வது இந்தியா அவற்றின் உள்கட்டமைப்பின் தரத்தின் அடிப்படையில். |
| **உலகளாவிய தொழிலாளர் பின்னடைவு குறியீடு** | வெள்ளை கவசம் (ஒயிட் ஷீல்ட்) | இந்தியா 65வது இடம். டென்மார்க் முதல் இடத்தைப் பிடித்தது. |
| **சேவைகள் வர்த்தக கட்டுப்பாடு குறியீடு** | பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் மேம்பாட்டுக்கான அமைப்பு | இந்தியா 47வது இடத்தில் உள்ளது. ஜப்பான் முதலிடத்தில் உள்ளது |
| **செயற்கை நுண்ணறிவு ஊடுருவல்** | நாஸ்காம் | **இந்தியாவின் செயற்கை நுண்ணறிவு ஊடுருவல் 3.09 ஆகும்.** இது அனைத்து G20 நாடுகளிலும் OECD நாடுகளிலும் மிக உயர்ந்ததாகும் |
| **அடித்தள எழுத்தறிவு மற்றும் எண்ணியல் (FLN) அறிக்கையின் 2வது பதிப்பு** | டாக்டர் பிபேக் டெப்ராய், தலைவர் EAC-PM. | – |

## *உச்சி மாநாடுகள்*

| உச்சி மாநாட்டின் பெயர் | நடந்த இடம் | உச்சிமாநாட்டின் நோக்கம் |
|---|---|---|
| **30வது தேசிய குழந்தைகள் அறிவியல் காங்கிரஸ்** | அகமதாபாத், குஜராத் | • கருப்பொருள்: **“ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வுக்கான சூழல் அமைப்பைப் புரிந்துகொள்வது”.**<br>• அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை |
| **1 வது G20 சர்வதேச நிதி கட்டிடக்கலை பணிக்குழு கூட்டம்** | சண்டிகர் | சர்வதேச நிதி கட்டமைப்பை வலுப்படுத்துவதில் கவனம் செலுத்துகிறது |
| **1 வது யூத்20 (Y20) தொடக்க கூட்டம் 2023** | கவுகாத்தி | – |
| **உலகளாவிய முதலீட்டாளர்கள் உச்சி மாநாடு 2023** | லக்னோ | – |

| | | |
|---|---|---|
| **5வது சர்வதேச கடல்சார் பாதுகாக்கப்பட்ட பகுதிகள் காங்கிரஸ்** | கனடா | கடல்சார் பாதுகாக்கப்பட்ட பகுதிகள் (MPA) எதிர்கொள்ளும் நிதி இடைவெளிகளை நிவர்த்தி செய்வதற்கான தீர்வுகள். |
| **இந்திய எரிசக்தி வாரம் (IEW) 2023** | பெங்களூரு | ஆற்றல் மாற்றத்திற்கான அதிகார மையமாக இந்தியாவின் உயரும் திறமையை வெளிப்படுத்துதல் |
| **இணைய வழி கொடுப்பனவுகள் உத்சவ்** | லக்னோ, ஹைதராபாத், பெங்களூரு ஆகிய இடங்களில் நடைபெற்றது | • டிஜிட்டல் முறையில் பணம் செலுத்துவது குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும்<br>• MeITY மூலம் |
| **உலக அரசாங்களின் உச்சி மாநாடு** | துபாய், ஐக்கிய அரபு எமிரேட்ஸ் | கருப்பொருள்: **எதிர்கால அரசாங்கங்களை வடிவமைப்பது** |
| **இந்தியா-ஆசியான் டிஜிட்டல் அமைச்சர்கள் கூட்டம்** | புது டெல்லி | **கருப்பொருள்: ஒரு நிலையான டிஜிட்டல் எதிர்காலத்தை நோக்கிய ஒருங்கியல் தன்மை** |
| **இந்திய அரிசி காங்கிரஸின் 2 வது பதிப்பு** | கட்டாக், ஒடிசா | கருப்பொருள்: **நெல் ஆராய்ச்சியை மாற்றுதல்** |
| **ஏரோ இந்தியா 2023** | பெங்களூர் | கருப்பொருள்: **ஒரு பில்லியன் வாய்ப்புகளுக்கான ஓடுபாதை** |
| **ஹார்பிங்கர்-2023** | இந்திய ரிசர்வ் வங்கி | உள்ளடக்கிய டிஜிட்டல் சேவைகள் |
| **உலகளாவிய இறையாண்மை கடன் வட்டமேசை** | பெங்களூரு | இந்தியாவுடன் IMF மற்றும் **உலக வங்கியின்** இணைத் தலைவர் (2023 ஜனாதிபதி) |
| **B20 மாநாடு** | மணிப்பூர் மாநிலம் | • கருப்பொருள்: **நிலையான வளர்ச்சி மற்றும் மேம்பாடு**<br>• **ஜி20 மாநாட்டின்** ஒரு பகுதி |
| **“அப்நெக்ஸ்ட் இந்தியா 2023” (வாங்குபவர் விற்பனையாளர்) சந்திப்பின் முதலாவது பதிப்பு** | குருகிராம் | சந்தை அணுகல் முன்முயற்சி - ஏற்றுமதி ஊக்குவிப்பு திட்டம். |

| | | |
|---|---|---|
| **இராணுவத்தில் பொறுப்பான AI பற்றிய உலகின் முதல் உலகளாவிய உச்சிமாநாடு** | **நெதர்லாந்து** | – |
| **12வது உலக ஹிந்தி மாநாடு** | **நாடி** | கருப்பொருள் : **இந்தி - பாரம்பரிய அறிவு முதல் செயற்கை நுண்ணறிவு வரை** |
| **தாரா (நகர்ப்புற நதிகளுக்கான முழுமையான நடவடிக்கை)** | | • நதி நகரங்கள் கூட்டணி (RCA) உறுப்பினர்களின் வருடாந்திர கூட்டம்<br>• ஏற்பாட்டு குழு தூய்மையான கங்கைக்கான தேசிய பணி தேசிய நகர்ப்புற விவகாரங்கள் நிறுவனம் |
| **3வது 'பயங்கரவாதத்திற்கு எதிரான கூட்டு பணிக்குழு'** | புது டெல்லி | • பயங்கரவாத எதிர்ப்பு<br>• இந்தியா - எகிப்து இடையே |
| **உலக பாதுகாப்பு காங்கிரஸ்** | ஜெய்ப்பூர் **(ஜெய்ப்பூர் அறிவிப்பு)** | • இரயில்வே பாதுகாப்பு உத்தி: பதில்கள் மற்றும் எதிர்காலத்திற்கான பார்வை<br>• சர்வதேச இரயில்வே யூனியன் மூலம் |
| **எலெக்ராமா இன் 15வது பதிப்பு 2023** | கிரேட்டர் நொய்டா | உலகின் மிகப்பெரிய தனி மின் கண்காட்சி |
| **குல்ஃபுடின் 28வது பதிப்பு 2023** | ஐக்கிய அரபு நாடுகள் | – |
| **ஆசிய பொருளாதார உரையாடல்** | புனே | • ஆசியா மற்றும் வளர்ந்து வரும் உலக ஒழுங்கு<br>• வெளியுறவு அமைச்சகத்தால் நடத்தப்பட்டது |
| **I2U2 இன் துணை அமைச்சர் கூட்டம்** | அபுதாபி | I2U2: இந்தியா, இஸ்ரேல், அமெரிக்கா மற்றும் ஐக்கிய அரபு நாடுகள் |
| **W20 தொடக்க கூட்டம் மகளிர் 20- G20 இன் பகுதி)** | அவுரங்காபாத் | இதனைத் தொடர்ந்து மற்ற 2 W20 சந்திப்புகள் நடைபெறும்<br>1. ஜெய்ப்பூர், ஏப்ரல் மாதம்<br>2. மகாபலிபுரம், ஜூன் மாதம் |

## செய்திகளில் இடம்பெற்ற இணையத்தளம்

| இணைய முகப்பு | நோக்கம் | தொடங்கப்பட்டது |
|---|---|---|
| **யுவ சங்கம் பதிவு போர்டல்** | வடகிழக்கு பிராந்திய இளைஞர்களுக்கும் இந்தியாவின் பிற பகுதிகளுக்கும் இடையே நெருக்கமான உறவுகளை உருவாக்குதல் | ஏக் பாரத் ஷ்ரேஷ்டா பாரதத்தின் கீழ். |
| **கானன் பிரஹாரி** | **சட்டவிரோத சுரங்கத்தை** தடுத்தல் | நிலக்கரி அமைச்சகம் |
| **பீமா சுகம்** | காப்பீடு வாங்குபவர்களுக்கும் விற்பவர்களுக்கும் பொதுவான தளத்தை உருவாக்குதல் | இந்திய காப்பீட்டு ஒழுங்குமுறை மற்றும் மேம்பாட்டு ஆணையம் (IRDAI) |
| **ஆதார் மித்ரா** | மக்களின் ஆதார் அட்டை தொடர்பான கேள்விகளுக்கு பதில் பெற உதவுவதற்காக | (இந்திய தனித்துவ அடையாள ஆணைய அமைப்பு) UIDAI |
| **தேசிய தரவு மற்றும் பகுப்பாய்வு தளம் (NDAP)** | பல்வேறு பங்குதாரர்களுக்கு அணுகக்கூடிய வகையில் பொது அரசாங்க தரவுகளுக்கான அணுகலை ஜனநாயகப்படுத்துதல் | **நிதி ஆயோக்** |
| **நோக்கம் செயலி** | **போட்டித் தேர்வுக்கான** பயிற்சிகளை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது | தமிழ்நாடு அரசு |

## புத்தகங்கள் மற்றும் ஆசிரியர்கள்

| புத்தகத்தின் பெயர் | ஆசிரியர் பெயர் | குறிப்பு |
|---|---|---|
| **“வெற்றி நகரம்”** | சல்மான் ருஷ்டி | விஜயநகர சாம்ராஜ்யத்தின் சுருக்கமான வரலாறு |

## செய்திகளில் இடம்பெற்றுள்ள உயிரினங்கள்

| உயிரினங்கள் | ஏன் செய்திகளில் இடம்பெற்றன? |
|---|---|
| **சோலிகா எக்கரினாடா** | **பிலிகிரி ரங்கனா** மற்றும் **மலே மகாதேஷ்வரா** ஆகிய கர்நாடக மலைகளில் காணப்படும் குளவி வகை |
| **ஓமோர்கஸ் கந்தேஷ்** | • இந்தியாவில் புதிய வண்டு இனம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது |

| | |
|---|---|
| | • இது ஒரு விலங்கு அல்லது மனிதனின் மரண நேரத்தைக் கண்டறிய உதவுகிறது என்பதால் தடயவியல் அறிவியலுக்கு முக்கியமானது |

## *விளையாட்டுச் செய்திகள்*

1. **கென்யாவின் விபிங்கோ ரிட்ஜில் நடந்த கென்யா லேடீஸ் ஓபன்** 2023 கோல்ஃப் போட்டியில் இந்தியாவின் டீன் கோல்ஃப் **அதிதி அசோக்** தனது **நான்காவது லேடீஸ் ஐரோப்பிய டூர் பட்டத்தை வென்றார்.**
2. **இந்தியாவின் முதல் ஃபார்முலா இ-ரேஸ்** ஹைதராபாத் இ-ப்ரிக்ஸ் ஹைதராபாத் நகரம் ஹுசைன் சாகர் ஏரியின் கரையில் உள்ள **'ஹைதராபாத் ஸ்ட்ரீட் சர்க்யூட்டில்'** நடந்தது.
3. **ஆசிய கோப்பை கால்பந்து**

| ஆசிய கோப்பை கால்பந்து | நடத்திய நாடு |
|---|---|
| **2023** | கத்தார் (1988 மற்றும் 2011க்குப் பிறகு மூன்று ஆசிய கோப்பைகளை நடத்திய முதல் நாடு) |
| **2027** | சவுதி அரேபியா (இந்தியா தனது ஏலத்தை திரும்பப் பெற்றது) |

4. **வாகோ ஆசிய கிக் பாக்ஸிங் சாம்பியன்ஷிப்**-2022 இல் **என். நீனா தங்கப் பதக்கம்** வென்றார்.
5. 25வது **தேசிய காதுகேளாதோர் விளையாட்டு சாம்பியன்ஷிப் இந்தூரில்** நடைபெற்றது
6. **பார்டர் கவாஸ்கர்** டிராபியை **பிசிசிஐ** மற்றும் **கிரிக்கெட் ஆஸ்திரேலியா** நடத்துகின்றன
7. **மகளிர் டி20 உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டி** தென்னாப்பிரிக்காவின் **கேப்டவுனில்** நடைபெற்றது
8. மொராக்கோவின் ரபாத்தில் நடந்த இறுதிப் போட்டியில் சவுதி அரேபியாவின் அல்-ஹிலாலை வீழ்த்தி ஐந்தாவது முறையாக **ரியல் மாட்ரிட் கிளப்** உலகக் கோப்பையை வென்றது.
9. **5வது கேலோ இந்தியா யூத் கேம்ஸ் 2022 :** பதக்கப் பட்டியலில் மகாராஷ்டிரா முதலிடம் பிடித்தது.
10. **கஜகஸ்தானின் அல்மாட்டி நகரில்** நடந்த FIDE உலக ரேபிட் சாம்பியன்ஷிப் பெண்கள் பிரிவில் **சவிதா ஸ்ரீ** வெண்கலம் வென்றார் (சதுரங்கம்)
11. சிலம்பத்தில் தனது செயல்திறனுக்காக இந்தியா புக் ஆஃப் வேர்ல்ட் ரெக்கார்ட்ஸில் **தன்விக்** இடம்பிடித்துள்ளார்
12. 10வது ஆசிய உள்ளரங்க தடகள சாம்பியன்ஷிப் **கஜகஸ்தானின் அஸ்தானா** நகரில் நடைபெற்றது

13. கிராண்ட்மாஸ்டர்களாக ஆன இந்தியாவின் **முதல் சகோதரர்கள் விக்னேஷ் மற்றும் விசாக் NR.**

14. **ISSF உலகக் கோப்பை** 2023 எகிப்தின் **கெய்ரோவில்** நடைபெற்றது.

| | |
|---|---|
| **பெண்களுக்கான 10 மீ ஏர் ரைபிள்** | **திலோத்தமா சென்** |
| **ஆண்களுக்கான 10 மீ ஏர் ரைபிள்** | ருத்ராங்க்ஷ் பாலாசாஹேப் பாட்டீல் |

15. **கராபோ கோப்பை** (EFL கோப்பை) கால்பந்துடன் தொடர்புடையது.

16. **கேலோ இந்தியா குளிர்கால விளையாட்டு போட்டிகள்** 2023 இன் 3வது பதிப்பு **ஜம்மு** மற்றும் காஷ்மீரின் குல்மார்க்கில் தொடங்கப்பட்டது. சின்னம்: **பனிச்சிறுத்தை.**

* * * * * * *

SHANKAR IAS ACADEMY ZERO CURRENT AFFAIRS